மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி கடலில் விபத்திலே இறந்துபோன வர்களுக்கு உதவி அளிப்பதில் இதுபோன்ற நிலைமைகள் பின் பற்றப்படுகின்றனவா என்ற விவரங்கள் தற்போது இல்லை. எனினும் உறுப்பினர் அவர்களுடைய கேள்வியை மையமாக வைத்து அது குறித்த விவரங்களை அரசு பெறும்.

திரு. எம். முகமது சித்திக் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர் சமுதாயப் பெருமக்களுக்கு அவர்களால் பிடிக்கப்படுகின்ற மீன்களை விற்பனை செய்வதற்கு, நகர்ப் புறங்களுக்கு எடுத்துச் சென்று விற்பனை செய்வதற்கு வாகன வசதிகள் செய்துதர அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இது கச்சத் தீவு பற்றிய கேள்வி. இதற்குத் தனிக் கேள்வி எழுப்புமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்..

(அ) இலங்கைப் போராளிகளுக்குத் தமிழ்நாட்டிலிருந்து ஆயுத உதவி செய்வதாக வெளியே தெரிவிக்கப் பெற்றுள்ள செய்தி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பொன் விஜயராகவன் அவர்கள் முன் இசைவு பெற்றபடி ஒரு செய்தி சொல்ல அனுமதிக்கிறேன்.

திரு. பொன். விஜயராகவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினமலர் பத்திரிகையில் ஒரு செய்தி வந்திருக்கிறது. இது ஒரு மிகமுக்கியமான செய்தியாகும். நேற்றைக்கு, அந்தப் பத்திரிகையிலே போட்டிருக்கக் கூடிய செய்தி, ஒரு பொதுக் கூட்டத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய பொதுச் செயலாளர் மரியாதைக்குரிய திரு. தா. பாண்டியன் அவர்கள் ஒரு மிகப் பெரிய குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறார்கள். இலங்கைப் போராளிகளுக்கு ஆயுதம் கொடுத்து, பத்திரிகையிலே வந்திருக்கக்கூடிய செய்தி (குறுக்கீடு)

1989 ஏப்ரல் 10] [திருபொன். விஜயராகவன்]

மன்னிக்கவும், இந்தியன் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய பொதுச் செயலாளர் திரு. தா. பாண்டியன் அவர்கள் ஒரு குற்றச்சாட்டை சொன்னதாகப் பத்திரிகையிலே ஒரு செய்தி வெளியிடப் பட்டிருக்கிறது. இலங்கைப் போராளிகளுக்கு ஆயுதம் கொடுத்து மீண்டும் கலவரத்தைத் தூண்ட முதல்வர் அவர்கள் திட்டமிட் டுள்ளார்கள் என்ற அளவுக்கு செய்தி வந்திருக்கிறது. இது மிகப் பெரிய குற்றச்சாட்டாகும். இந்தக் குற்றச்சாட்டைப் பொறுத்தவரையில், எந்த நோக்கத்திலே இந்தக் குற்றச்சாட்டு சொல்லப்பட்டது என்பது எனக்குத் தெரியவில்லை. ஆனாலும் கூட, உண்மையிலேயே இந்தக் குற்றச்சாட்டு முதலமைச்சர் அவர்களைப் பற்றிச் சொல்கிறபோது அதற்குப் பின்னாலே விளக்கம் எதுவும் தரவில்லை.

இங்கே முதலமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். போராளி களுக்குள்ளே சமரசத்தை ஏற்படுத்தி ஒரு சுமுகமான சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்கின்ற சூழ்நிலை இருக்கின்ற நேரத்தில், இப்படிப்பட்ட குற்றச்சாட்டை சொல்வது அதனுடைய நோக்கம் எப்படிப்பட்டதாக இருக்கிறது என்று எனக்குத் தெரிவில்லை. இருந்தாலும், சுமுகமான சூழ்நிலையை உருவாக்குவதற்கு இது தடங்கலாக இருக்கும் என்பது மட்டுமல்லாமல், இதனுடைய உள் அர்த்தம் என்ன என்பதைப் பற்றி முதலமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்திலேயே விளக்கம் தரவேண்டும். இது முக்கிய மான குற்றச்சாட்டு என்பதைச் சொல்லி, முதலமைச்சர் அவர் கள் இந்த மாமன்றத்திலேயே விளக்கத்தைத் தரவேண்டு மென்றும் உங்கள் மூலமாக இதற்கு ஒரு பரிகாரம் தரவேண்டு மென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று முன்தினம் பத்திரிகையிலே பார்த்தபோதே, இந்த அவையிலே இப்படி ஒரு பிரச்சினை நிச்சயமாக எழுப்பப்பெறும் என்று நான் உணர்ந்தேன். ஏனென்றால், நண்பர் திரு. பாண்டியன் அவர்கள், இந்தியன் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர்,—நம்முடைய பாண்டியன் என்று தவறாகக் கருதிவிடக்கூடாது என்பதற்காக சொல்கிறேன்—இந்தியன் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய, தமிழ் மாநிலத்தினுடைய தலைவராக இருக்கின்ற பாண்டியன் அவர் கள், மத்திய அமைச்சர் அவர்கள் கலந்துகொண்ட ஒரு கூட்டத் திலேயே. அதாவது மத்திய உள் துறை இணை அமைச்சர் அவர்கள் கலந்துகொண்ட ஒரு கூட்டத்திலேயே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர், தமிழ்நாடு ஜனதா கட்சியினுடைய தலைவர் திரு. பொன்.விஜயராகவன் அவர்கள் எடுத்துக்கூறிய இதே வாசகங்களை பேசி இருப்பது ஏடுகளிலே வெளிவந்திருக் கிறது· விடுதலைப் புலிகளுக்கு அல்லது விடுதலைப் போராளிகளுக்கு முதலமைச்சர் ஆயுதங்களை வழங்கியிருக்கிறார். மீண்டும்

ஒரு தகராறை தமிழ்நாட்டிலே ஏற்படுத்துவதற்காகத் திட்ட மிட்டிருக்கிறார் என்பது போன்ற ஒரு பயங்கரமான பழியை இந்த அரசின்மீது அல்லது என்மீது அவர் சுமத்தியிருக்கிறார். திரு. பொன் விஜயராகவன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல் இந்திய நாட்டினுடைய பிரதமர் மாண்புமிகு ராஜீவ் காந்தி அவர்களிடத்திலே, டெல்லியிலே நான் 4 முறை நேரிலே சந்தித்து பேசியபோது மிக முக்கியமாக இலங்கைப் பிரச்சினை யில் அமைதி காண வேண்டுமென்ற அடிப்படையில்தான் பேசியிருக்கின்றேன். விடுதலைப் போராளிகளோடு குறிப்பாக எல்.டி.டி.இ. உட்பட விடுதலைப் போராளிகளுடனும் மத்திய அரசு, இலங்கை அரசு மற்றும் தொடர்புடைய அத்தனை பேரும் கலந்துப் பேசி ஓர் அமைதியான சூழ்நிலையை உருவாக்க எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்கு நாங்கள் ஒத்துழைப்பு தருவோம்என்று இந்தப்பிரச்சினை குறித்து அவரிடத்திலே நானும் சொல்லியிருக்கிறேன். அவரும் அதுகுறித்து ஆவன செய்வதாகக் குறிப்பிட்டிருக்கிறார். அதுபற்றி இந்த அவையிலும் பல முறை வினாக்கள் எழுந்தபோது நான் விளக்கங்களை அளித்திருக்கிறேன் இப்பொழுது திரு. பாண்டியன் பேசியிருப்பது உள்ளபடியே ஒரு பொறுப்புள்ள நண்பர்-ஒரு பொறுப்புள்ள கட்சியின் தலைவர் பேசிய பேச்சாக அது இல்லை. 1988 ஆம் ஆண்டு அக்டோபர் மாத வாக்கில் தமிழ்நாட்டிலே சென்னை, மதுரை போன்ற இடங்களில் கைது செய்யப்பட்ட விடுதலைப் போராளிகள், குறிப்பாக விடுதலைப் புலிகள், சென்னை, மதுரை சிறைச்சாலை களில் வைக்கப்பட்டு, அங்கிருந்து விடுவிக்கப்பட்டு உடனடியாக விமானம் மூலமாக இலங்கைக்கு அனுப்பப்பட்டார்கள். அப்படி அனுப்பி வைக்கப்பட்ட பிறகு, அவர்கள் இங்கே பல இடங்களில் தங்கியிருந்தார்கள். ஏற்கெனவே 1988 ஆம் ஆண்டுக்கு முன்பே தமிழ்நாட்டின் பல வீடுகளில் அவர்கள் வாடகைக்குப் பெற்றோ அரசின் உதவியாலோ இங்கே தங்கியிருந்தார்கள். அப்படித் தங்கியிருந்த வீடுகள் எல்லாம் பூட்டப்பட்டு, அவைகள் எல்லாம் போலீசார் வசம் இருந்த காரணத்தால் அந்த வீட்டுச் சொந்தக்காரர்கள் டைரக்டர் ஜெனரல் ஆப் போலீசுக்குச்கடிதம் எழுதினார்கள். இந்த வீடுகளிலே இலங்கை விடுதலைப் போராளி கள் இதுவரை வாழ்ந்துவந்தார்கள். இப்போது அவர்கள் எல்லாம் இலங்கைக்கு அனுப்பப்பட்ட காரணத்தினால் அந்த வீடுகள் எல்லாம் பூட்டிக் கிடக்கின்ற காரணத்தால் எங்களுக்கு வாடகை வர வழியில்லை. எனவே வீடுகளைக் காலி செய்து தர வேண்டும் என்று அப்பொழுது டி.ஜி.பி.-க்கு வீட்டுச் சொந்தக் காரர்கள் கடிதம் எழுதினார்கள்.அது குறித்து அரசுடன் அதிகாரி கள் ஆலோசித்தபோது வீட்டுச் சொந்தக்காரர்களின் நலனைக் கருதி வீடுகளை காலி செய்வதுதான் முறை என்று முடிவெடுக்கப் பட்டது. அதன்படி அந்த வீடுகள் காலி செய்யப்பட்டு, அந்த வீடுகளிலிருந்த பொருள்கள் யாருக்குச் சொந்தம் என்றால், கைது செய்யப்பட்டு, பிறகு இலங்கைக்கு அனுப்பப்பட்ட அந்த விடுதலைப் புலிகள் இங்கே வீடுகளில் வாழ்ந்தார்களோ

அவர்களுக்குச் சொந்தமான பொருள்கள் என்னென்ன பொருள்கள் என்று பார்த்தால் அவர்களுடைய துணிமணிகள், கார்கள், ஒன்றிரண்டு மோட்டார் சைக்கிள்கள், சைக்கிள்கள், மேஜை நாற்காலி போன்ற பொருள்களை எல்லாம் யார் பெற்றுக் கொள்வது என்ற நிலைமை ஏற்பட்டபோது, இலங்கைத் தமிழர் மறுவாழ்வு இயக்கத்தினுடைய செயலாளர் திரு. பரம குருசாமி என்பவரிடம் அந்தப் பொருள்களை ஒப்படைக்கலாம் என்று தீர்மானிக்கப்பட்டு, அவரும் அந்தப் பொருள்களை ஏற்றுக்கொள்வதாகக் கூறி, நான் முதலிலே குறிப்பிட்ட அந்த,த் துணிமணிகள், கார்கள், மோட்டார் சைக்கிள்கள், சைக்கிள்கள், மேஜை நாற்காலி போன்றவற்றை எல்லாம் அவரிடத்தில் ஒப்படைக்கப்பட்டன. ஆயுதங்களும் ஒப்படைக்கப்பட்டன என்பதற்கு எந்தச் சான்றுகளும் இல்லை. அது முழுக்க முழுக்க உண்மைக்கு மாறான ஒரு தகவல். வேண்டுமென்றே கூறப்பட்ட ஒரு பழி. இன்னும் சொல்லப்போனால் இந்த விடுதலைப் போராளிகள் கைது செய்யப்பட்டபோது அவர்களிடமிருந்து போலீசார் எந்த ஆயுதத்தையும் கைப்பற்றவில்லை. ஆயுதங்களைக் கைப்பற்றாதபோது எந்த ஆயுதங்களைத் தர முடியும் என்கிற கேள்விக்கு இயல்பாகவே விடை கிடைக்கும். எனவே அந்தக் கூற்று முற்றிலும் உண்மைக்கு மாறானது என்பதையும், வேண்டுமென்றே இந்த அரசின்மீது ஒரு பழியை சுமத்துவதற்காகச் சொல்லப்பட்ட கூறு என்பதையும் விளக்கமாக நான் இங்கே சொல்ல விரும்புகிறேன்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியன் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர் திரு. தா. பாண்டியன் பேசியபோது அந்தக் கூட்டத்திலே நான் இருந்தேன். உள்துறை இணை அமைச்சர் திரு. ப. சிதம்பரம் அவர்கள் திரு. பாண்டியன் அவர்கள் பேசிய அந்த நேரத்திலே அங்கே இல்லை. இங்கே அந்தக் கூட்டத்தில் அவர் இருந்ததாக ஒரு தகவல் சொல்லப்பட்டது. அவர் அன்றைய விமானத்திலேயே புறப்பட்ட காரணத்தால், அந்தக் கூட்டத்திலே கலந்து கொண்டாலும் கூட திரு. பாண்டியன் பேசிய நேரத்தில் அங்கே இல்லை. இன்னும் சொல்லப்போனால் மத்திய உள் துறை இணை அமைச்சர் அவர்கள் பேசியபோது பல கருத்துக்களைச் சொன்னதாக செய்தி வந்தது. உதாரணமாக போட்டோவைக் காட்ட வேண்டுமென்று அவர் சொல்லவே இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தங்கள் தகவலுக்கு நன்றி. இப்பொழுது இலங்கைத் தமிழர் பிரச்சினையைப் பற்றி மட்டும் சொல்லுங்கள்.

]1989 ஏப்ரல் 10

(முற்பகல் 10-00)

திரு. குமரி அனந்தன்: அதனாலே, திரு. பாண்டியன் அவர்கள், போராளிகள் கைது செய்யப்பட்ட நேரத்திலே அவர்களிடம் ஆயுதங்கள் இல்லை என்றாலும், போராளிகள் எல்லாம் இங்கே ஆயுதங்களோடு இருந்த காரணத்தாலே, பூட்டப்பட்ட வீடுகளிலிருந்து எடுக்கப்பட்டவைகளில் ஆயுதங்களும் இருக்கக்கூடுமென்பதற்கு ஒரு வேளை அவரிடம் ஆதாரங்கள் இருக்கக்கூடும். எனவே ஒரு பொறுப்பான கட்சியினுடைய தலைவராக இருக்கிற காரணத்தாலே, அவர் அந்த ஆதாரங்களைப் பற்றி பின்னாலே அறிவிக்கக்கூடும். அந்த நேரத்திலே மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அதனைக் குறிப்பாக வைத்துக்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கத் தேவையாக இருக்குமென்ற அளவிலே அவர் பேசியிருப்பார் என்றே நான் கருதுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் தவறாகத் தரப்பட்ட ஒரு தகவலுக்காக இந்த அளவுக்கு வக்காலத்து வாங்கியிருக்கத் தேவையில்லை. மத்திய அமைச்சர் இருந்த கூட்டமா, அவர் இருக்கும்போது பேசப்பட்டதா என்பதல்ல. அவர் கலந்து கொண்ட கூட்டம். ஏனென்றால் மறுநாள் பத்திரிகையில் வரும்போது, மத்திய உள்துறை இணை அமைச்சர் கலந்துகொண்ட கூட்டத்தில் திரு. தா. பாண்டியன் அவர்கள் பேசியிருக்கிறார்கள் என்று வந்திருக்கிறது. நான் இவ்வளவு விளக்கம் அளித்த பிறகும், துணி மணிகள், மேசை நாற்காலிகள், சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள், கார்கள் போன்றவைகள் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டன என்று விளக்கம் அளித்த பிறகும்கூட அதை ஏற்றுக்கொள்ளாமல், திரு பாண்டியன் சொல்வதிலும் உண்மைகள் இருக்கலாமென்பதுபோல நம்முடைய நண்பர்திரு. குமரி அனந்தன் அவர்கள் பேசுவது எனக்கு விந்தையாக இருக்கிறது. யாரிடத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறதென்றால் பரமகுருசாமி என்கிற இலங்கைத் தமிழர்களுடைய மறுவாழ்வு இயக்கத்தினுடைய செயலாளர் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. நான் இன்னொரு உண்மையையும் சொல்ல வேண்டியிருக்கிறது. முன்பு 3 கோடி ரூபாய் ஒப்படைக்கப்பட்டதே, அதே நபரிடத்திலே தான் இதுவும் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தகவலையும் இந்த அவைக்குத் தரவேண்டியவனாக நான் இருக்கிறேன். அதுவும் மறுவாழ்வு இயக்கத்தின் பெயரால் அப்போது 3 கோடி ரூபாய் ஒப்படைக்கப்பட்டது. அப்போதிருந்த அரசின் சார்பாக, நான் நிச்சயமாகச் சொல்கிறேன், ஆயுதங்கள் யாருக்கும் தரப்படவில்லை. ஏற்கனவே ஆயுதங்கள் வைத்துக் கொண்டிருப்பார்களானால், அதை யார் தந்தது, எவர்

தந்தது என்பதைப் பற்றி நாடு மிக நன்றாக அறியும். அவற்றைப் பற்றியெல்லாம் பேசி, இங்கே நான் சிக்கலை உருவாக்க விரும்பவில்லை. ஏனென்றால், ஒரு அமைதியான முடிவை நோக்கி இலங்கைத் தமிழர்களுடைய நிரந்தரமான, நிலையான வாழ்வு அமைய வேண்டுமென்று எண்ணுகிற நேரத்தில், இப்படிப்பட்ட தவறான கருத்துக்களை எடுத்துக்கூறி, ஏதோ தமிழ் நாட்டிலே ஒரு போர்க் களத்தை, இலங்கைத் தமிழ்ப்போராளிகளைக் கொண்டு உருவாக்குவதற்கு திட்டமிடப்படுகிறதென்ற தவறான வார்த்தைகளைச் சொல்வது பொறுப்புள்ளவர்களுக்கு அழகல்ல, என்பதால்தான் இதைச் சொல்கிறேன், நான் பொறுப்பிலே இருக்கிற காரணத்தாலே.

(ஆ) தமிழ்ப் புத்தாண்டு தினத்தன்று ஏழை மக்களுக்கு இலவச அரிசி வழங்குதல்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஒரு முக்கியமான பிரச்சினை சம்பந்தமாக மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சரவர்களுடைய கவனத்திற்கு ஒன்றை நான் கொண்டுவருகிறேன். தமிழ்ப் புத்தாண்டு தினத்தன்று ஏழை மக்களுக்கு 5 கிலோ அரிசி வழங்கப்படுமென்று மாண்புமிகு முதலமைச்சரவர்கள் தமிழக அரசின் சார்பில் அறிவித்திருக்கிறார்கள். அவர்களுக்கு நலிந்த மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த அரிசி வழங்கும் திட்டத்தில் ஒரு சிக்கல் உருவாகியிருப்பதாக பொது மக்கள் நேற்றைய தினம் என்னிடம் முறையிட்டார்கள். கூட்டுறவுத் துறை மூலமாக கூட்டுறவுச் சங்கங்களுக்கு அனுப்பப்பட்டிருக்கும் சுற்றறிக்கையில் கார்டுகளுக்கு முன்கூட்டியே அரிசி வாங்கியிருந்தால் அவர்களுக்கு இலவசமாக அரிசி வழங்க இயலாது என்று எழுதியுள்ளதாகவும், ஆகவே பலருக்கு அரிசி கிடைக்க வாய்ப்பு இல்லை என்றும் அவர்கள் என்னிடத்தில் சொன்னார்கள். நான், அமைச்சரவர்களிடம் விளக்கம் கேட்டு, விவரமான சுற்றறிக்கை அனுப்ப ஏற்பாடு செய்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன். எனவே முன்கூட்டியே அரிசியை வாங்கியவர்களுக்கும், தமிழக அரசின் சார்பாக இனாமாக வழங்கப்படுகிற அந்த அரிசி கிடைப்பதற்கு மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சரவர்கள் உடனடியாக அரசாங்கத்தின் சார்பாக அறிக்கை அனுப்புவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு, அதற்கான பதிலைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இலவச அரிசி வழங்குவது பற்றி அறிவிப்பு தந்தவுடன், சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனிலிருந்தும், கூட்டுறவுப் பதிவாளரிடத்தி